# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 13 |
| Name | : Tr. Surendar |
| Father/Husband's Name | : Anbanandham |
| Village | : Anna Salai |
| Taluk | : Palur |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பாலூரில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த டிசம்பர் மாதம் 22ம் தேதி 2022 அன்று இரவிவர்மன் என்பவரும் நானும் பாலூர் வழியாக இரயில்வே கேட்டை தாண்டி கடைக்கு சென்றோம். நாங்கள் போகும் போது பாலூர் இரயில்வே நிலையத்தை தாண்டி கோனாஞ்சேரி செல்லும் வழியில் ஒரு விபத்து நடந்திருந்திருந்தது. நான் போகும் போது விபத்து ஏற்பட்டிருந்தது நான் அருகில் சென்று பார்த்த போது தான் விபத்து கலைவாணன் என்பவருக்கு ஏற்பட்டிருந்தது தெரிய வந்தது. டாரஸ் லாரி எனக்கு முன்பு சென்று கொண்டிருந்தது. நான் அந்த லாரிக்கு பின்பு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். கலைவாணன் என்பவர் லாரிக்கு எதிர் திசையில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அவ்வாறு வரும் போது தான் விபத்து ஏற்பட்டிருந்தது.

நான் அருகில் சென்று பார்த்த போது கலைவாணன் என்பது தெரியவந்தது. நான் பார்க்கும் போதே அவருக்கு உயிர் பிரிந்திருந்தது. எவ்வாறு விபத்து நடந்தது என்று

தெரியவில்லை விபதது நடந்தது மட்டும் தெரியும். சிறிது நேரத்தில் போலிசார் வந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. விபத்து ஏற்படுத்திய லாரியின் எண் தெரியாது. நானும் இரவிவர்மனும் விபத்தை பார்த்தோம் மற்றும் அங்கு நிறைய நபர்கள் இருந்தார்கள். விபத்திற்கு காரணம் என்னவென்று என்னால் கூற இயலாது நான் பின்பக்கமாய் வந்து கொண்டிருந்தேன். விபத்தில் இறந்தவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். லாரியை ஓட்டி வந்தவரை நான் பார்க்கவில்லை. விபத்துக்கு பிறகு லாரி டிரைவர் இறங்கி ஓடிவிட்டார். போலிசார் என்னை விபத்து சம்மந்தமாக விசாரித்தனர். விபத்து நடந்த நேரம் பகல் 01.30 மணியிருக்கும்.

**இந்த சாட்சியை பகுதியாக விபத்து தேதி, வாகன எண் மற்றும் எதிரியின் அடையாளம் குறித்து மட்டும் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது போலிஸ் விசாரணையில் விபத்து டிசம்பர் 31ம் தேதி நடந்ததாக போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் TN 11 AL 5526 என்று லாரியின் எண்ணை கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான் அவர்களே எழுதி கொண்டார்கள். விபத்து நடந்த போது போலிசார் சம்பவயிடத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையில் விபத்து ஏற்படுத்திய டிரைவர் ஆஜர் எதிரி தான் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நானும், இரவிவர்மனும் டமால் என்று சத்தம் கேட்டு தான் அந்த இடத்திற்கு சென்று பார்த்தோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் அப்போது யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் யாருமில்லை நாங்கள் தான் இருந்தோம். எவ்வளவு நேரத்தில் அந்த இடத்தில் மக்கள் கூடினார்கள் என்றால் 5 நிமிடத்தில். போலிசார் எப்போது வந்தார்கள் என்று கேட்டால் 10 நிமிடத்தில். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் விபத்து நடந்த இடத்தில். நான் எனது முதல் விசாரணையில் விபத்து எவ்வாறு நடந்தது என்று கூறியுள்ளேன் அதே விவரத்தையும் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஓட்டுநரை சம்பவயிடத்தில் பார்க்கவில்லை என்று சொன்னால் அவர் ஓடும் போது நான் பார்த்தேன். எதிரி இறங்கி ஓடும் போது அவர் முகத்தை பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை என்று

சொன்னால் சரிதான். போலிசார் விசாரணையிலும் இதே விவரத்தை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.